அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.12/2000

எனது இல.11/719அ/202/116
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07
2000 ஜூலை மாதம் 19 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
பிரதம செயலாளர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

## செய்முறைப் பயிற்சிக்காக பயிலுநர்களை அரச நிறுவனங்களுக்கு இணைத்தல்

மேற்படி விடயத்திற்கு ஏற்புடையதாக 1994.01.10, 1995.03.07, 1996.07.11 ஆந் திகதிகளில் முறையே வெளியிடப்பட்டுள்ள 2/94, 02/94(II) மற்றும் 02/94(III) ஆம் இலக்கங்களைக் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளும், 1995.07.19 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை கடிதமும் உடனடியாக செயற்படும் வண்ணம் இரத்துச் செய்யப்படுவதுடன், அதற்குப் பதிலாக பின்வரும் ஏற்பாடுகளை கையாள வேண்டும்.

02. தேசிய இளைஞர் மன்றம், தேசிய பயிலுநர் பயிற்சி அதிகாரசபை மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகள் போன்ற அரச பயிற்சி நிறுவனங்களில் பாடநெறிகளை கற்று தகைமைகளை கொண்டுள்ள மாணவர்களால் செய்முறைப் பயிற்சி பெறுவதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் அதிகாரம் உடனடியாகச் செயற்படும் வண்ணம் எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், பிரதம செயலாளர்களுக்கும், மாவட்டச் செயலாளர்களுக்கும் அளிக்கப்படுகின்றது.

03. அதன்படி செய்முறை பயிற்சியளிப்பதற்கு எதிர்பார்க்கின்ற தகைமையுடையோரின் விண்ணப்பங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ உருவில் இரு பிரதிகளாக (02) பூர்த்தி செய்து திணைக்களத் தலைவரின் விதப்புரையுடன் தொடர்புடைய அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

04. இதில் 06 ஆம் பந்தியின் கீழ் காட்டப்பட்டுள்ள தொழில்நுட்ப பகுதியின் செய்முறை பயிற்சி தவிர்ந்த மற்றைய எல்லா செய்முறைப் பயிற்சிகளும் கட்டாயமாக ஆறு மாதங்களுக்கு வரையறுக்கப்பட வேண்டும்.

05. தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால் மட்டும் நாளாந்தப்படியாக 75/- ரூபா செலுத்த முடிவதுடன் அதற்கு மேலதிகமாக எதுவித படியோ உழைப்பூதியமோ கொடுபடலாகாது.

06. ஆறு மாதங்களுக்கு மேல் செய்முறைப் பயிற்சியளிக்கப்பட வேண்டிய பாடநெறிகளாக தேசிய பயிலுநர் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபை, அத்துடன் இணைந்த கட்டுநாயக்க தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நிறுவனம், மொரட்டுவ பயிலுநர் பயிற்சி நிறுவனம், இலங்கை மோட்டார் இயந்திர பொறியியல் நிறுவனம் ஆகிய நிறுவனங்களில் நடாத்தப்பட்டுவரும் தொழில் நுட்பப் பாடநெறிகள் மட்டுமே தற்போது இனம் காணப்பட்டுள்ளன. அந்தப் பயிற்சி, பாடநெறியின் விதப்புரை செய்யப்பட்ட செய்முறை பயிற்சிக்கால எல்லையை மீறுதலாகாது.

07. பயிலுநர்கள் பயிற்சிக்காக நிறுவனமொன்றிற்கு இணைக்கப்படும் போது அவர்களுக்கு நிறுவனத்தின் ஏதேனுமொரு பதவியின் பொறுப்புகளை அளித்தலாகா.

08. செய்முறைப் பயிற்சி பெறும் பயிலுநர்கள் அரசின் நிரந்தர அல்லது நிரந்தரமாக ஊழியரொருவருக்கு உரித்தான சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவர்களல்ல என்பதை தெளிவாக எழுத்து மூலம், அறிவிக்க வேண்டும். மேலும் செய்முறைப் பயிற்சிக்காக உள்ளீர்க்க அங்கீகாரம் வழங்கப்படலும் ஆகாது.

ஒப்பம்: மஹிந்த பந்துசேன.
செயலாளர்,
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

## செய்முறைப் பயிற்சியளிப்பதற்கான விண்ணப்பம்

எனது இல.....................................

திகதி.........................................

அமைச்சுச் செயலாளர்/பிரதம செயலாளர்
மாவட்டச் செயலாளர்

### பகுதி - 1

01.1 அலுவலகம்:-.......................................................................

01.2 பயிற்சிக்காக இணைக்கப்படும் நிறுவனத்தின் பெயர்:..................................
..........................................................................................

01.3 தொடர் இலக்கமும் திகதியும்:............................................................

02. பயிற்சியளிக்க எதிர்பார்க்கின்ற பயிலுநர்கள் பற்றிய விபரங்கள்

| பயிலுநரின் பெயர் (1) | விடயம் (2) | தொடக்கத் திகதி (3) | முடிவுத் திகதி (4) | காலம் (5) |
|---|---|---|---|---|
| I | | | | |
| II | | | | |
| III | | | | |
| IV | | | | |

06. மேலே பெயர் குறிப்பிட்டுள்ள பயிலுநர்களுக்கு கொடுப்பனவுகளை செய்வதற்காக ஒதுக்கீடு உள்ளது/இல்லை

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள பயிலுநர்களுக்கு அதில் குறிப்பிட்டுள்ள காலப் பகுதியில் செய்முறை பயிற்சியளிப்பதை விதப்புரை செய்கிறேன்/விதப்புரை செய்யவில்லை

.......................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

பெயர்.................................................

பதவி.................................................

<u>பகுதி – II</u>

எனது இல……………………………………
திகதி……………………………………

01. முதலாம் பகுதியில் பெயர் குறிப்பிட்டுள்ள பயிலுநர்களுக்கு அதற்கு முன்னால் குறிப்பிட்டுள்ள ஆறு(06) மாத /……………………வருட காலத்திற்கு செய்முறை பயிற்சியளிப்பதை அங்கீகரிக்கிறேன்/அங்கீகரிக்கவில்லை. பயிற்சி பெறும் ஒரு நாளுக்கு 75/-ரூபா வீதம் கொடுப்பனவு செய்வதை அங்கீகரிக்கிறேன்/அங்கீகரிக்கவில்லை.

அமைச்சின் செயலாளர்/பிரதம செயலாளர்
மாவட்டச் செயலாளர்